தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
&
இந்திய வானிலைத் துறை
வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண்
அறிக்கை
(18.05.2024 முதல் 22.05.2024)

அறிக்கை எண் 040/2024 தேதி.17.05.2024

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 14.05.24 முதல் 16.05.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C முதல் 24°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-17 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (14.05.2024 முதல் 16.05.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 22.05.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14/05 | 15/05 | 16/05 | தேதி | நாள்-1 18/05 | நாள்-2 19/05 | நாள்-3 20/05 | நாள்-4 21/05 | நாள்-5 22/05 |
| 17.5 | 17.6 | 8.4 | மழை (மி.மீ) | 29 | 30 | 29 | 32 | 16 |
| 34 | 34 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 31 | 30 | 30 | 29 |
| 24 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 20 | 20 | 20 |
| 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 76 | 87 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 61 | 56 | 50 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 60 | 60 | 70 |
| 17 | 15 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 12 | 6 | 14 |
| 230 | 340 | 200 | காற்று வீசும் திசை | 250 | 230 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (18.05.2024 முதல் 22.05.2024)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 29°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **18-05-2024** | 24.0 | 26.0 | 27.0 | 25.0 | 26.0 | 26.0 | 24.0 | 24.0 | 26.0 | 26.0 | 26.0 | 26.0 |
| **19-05-2024** | 20.0 | 25.0 | 27.0 | 24.0 | 26.0 | 27.0 | 22.0 | 22.0 | 26.0 | 24.0 | 25.0 | 25.0 |
| **20-05-2024** | 22.0 | 26.0 | 28.0 | 25.0 | 26.0 | 27.0 | 23.0 | 23.0 | 26.0 | 25.0 | 26.0 | 25.0 |
| **21-05-2024** | 26.0 | 28.0 | 29.0 | 27.0 | 28.0 | 29.0 | 26.0 | 26.0 | 29.0 | 27.0 | 28.0 | 28.0 |
| **22-05-2024** | 33.0 | 22.0 | 20.0 | 22.0 | 17.0 | 17.0 | 29.0 | 29.0 | 18.0 | 25.0 | 20.0 | 19.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் **5** நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு **4 - 20** கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தினை ஒத்திவைக்கவும். பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.<br>அதிகப்படியான மழைநீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிக்கலாம்.<br>தொடர்ச்சியாக மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம், விதைப்பு, உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை ஒத்தி வைக்கவும். |
| நெல் | விதைப்பு | மழை எதிர்பார்க்கப்படுவதால் புதியதாக விதைப்பு செய்த நாற்றாங்காலில் மாலைவேளைகளில் நீரினைத்தேக்கி காலையில் வடிப்பதனால் மழையின் வேகத்தால் விதைமுளைப்பு பாதிக்கப்படுவதனைத் தவிர்க்கலாம். இதுவலை விதைப்பு செய்யாவிடில் விதைப்பினை ஒத்திவைக்கவும். |
| நிலக்கடலை | விதைப்பு | பொள்ளாச்சி வட்டாரத்தில் சித்திரைப்பட்ட நிலக்கடலை நடவு செய்ய இதுவே உகந்த தருணமாகும். மேலும் மழை |

| | | |
|---|---|---|
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். மழை பெய்துள்ளதால் ஏற்பட்ட மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு வடிகால் வசதியுடன்பின் பருவ கரும்பு நடவை தொடர்ந்து மேற்கொள்ளவும். |
| மஞ்சள் | நிலம் தயாரித்தல் | பெய்துள்ள மழையை பயன்படுத்தி வடிகால் வசதியுடன் தொடர்ந்து மஞ்சள் நடவு செய்யவும். |
| மரவள்ளி | அறுவடை | பெய்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யலாம். |
| வாழை | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| திராட்சை | | நிலவும் வானிலை உகந்ததாக இருப்பதால் பருவகால திராட்சையில் கவாத்து செய்யவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகுடில்களின் கூரைகளைப் மழைநீர் ஒழுகாமல் பராமரிக்கவும். |

**குறுஞ்செய்தி**

- தொடர்ச்சியாக மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம், விதைப்பு, உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை ஒத்தி வைக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**